www.tamilarangam.net

# திரு. நெடுமாறன் அவர்கட்கு. . . . . . . . . . . . . . .

## வரலாற்றில் ஒரு ஏடும் குறிப்பும்

தாங்கள் கனடா வந்து இங்குள்ள தமிழ் பிரச்சார சாதனங்களுக்கு கொடுத்துள்ள பேட்டிகளில் ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டத்தில் சில உண்மைகளை மறைத்தும் விடுதலைப்போராட்ட வரலாற்றை திரிபு படுத்தியும் வருகிறீர்கள்.

1983ம் ஆண்டு இலங்கையில் நடந்த தமிழருக்கு எதிரான வன்முறையில் தமிழகம் கொதித்தது. அந்த நேரத்தில் இராமேஸ்வரத்தில் இருந்து தொண்டர்களுடன் இலங்கையை நோக்கி வருவதற்கு முயற்சி செய்தீர்கள் அம்முயற்சியையும் இனஉணர்வையும் பாராட்டாமல் எம்மால் இருக்கமுடியாது ஆனால் தற்போது நீங்கள புலிகளின் கைக் கூலியாக மாறி உண்மைக்கு புறம்பான விடயங்களை அள்ளி வீசுகிறீர்கள் அதுதான் எமக்கு கவலை அளிக்கின்றது.

இங்குள்ள வானொலியில் உங்கள் பேட்டிக்கு பின்னர் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கையில் ஏனைய தமிழ் இயக்கங்கள் இந்திய றோவினதும் இலங்கை அரசின் கையாட்களும் என்பதால் அவர்களை அழிக்க வேண்டி வந்தது என்று அப்பட்டமான பொய்யை கூறி இருக்கிறீர்கள். ஒன்றில் உங்களுக்கு விடுதலைப்போராட்ட வரலாறு தெரியாமல் இருந்திருக்கவேண்டும் அல்லது எஜமானர்களுக்கு(புலிகளுக்கு) நன்றிக்கடனாக அவர்கள் தந்த பணத்திற்காக இப்பொய்யை சொல்லி இருக்கவேண்டும்.

உங்களுக்குத தெரியுமா? 1984-85ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் குண்டு வெடிப்பை நடத்த இந்திய உளவுப்படையான றோ ஏனைய இயக்கங்களை கேட்டது. அப்பாவி மக்களைக் கொல்வது பிழையென மறுத்துவிட்டன ஏனைய இயக்கங்கள். ஆனால் புலிகள் உடன்பட்டு விட்டார்கள். புலிகள் றோவின் பணத்திற்கும் ஆயுதத்திற்கும் ஆசைப்பட்டு அநுரதபுர பஸ்நிலையத்தில் ஒரு படுகொலையையும் கொழும்பு பிரதான பஸ்நிலையத்தில குண்டு வெடிப்பையும் நடாத்தி பல அப்பாவி சிங்கள மக்களைக் கொன்று றோவின் கைக்கூலியாக செயல்பட்டார்கள். இதைவிட றோவானது புலிகளுக்கே அதிக பண ஆயுத உதவிகளையும் செய்தது. தமிழ் இயக்கங்களை புலிகள் அழித்த பின்னரும் றோவானது புலிகளுக்கு ஆயதம் கொடுத்திருக்கின்றது.

ஆனால் புலிகளோ உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தது போல உங்கள் இந்திய நாட்டின் பிரதம மந்திரி இராஜிவ் காந்தியை உங்கள் தமிழ் நாட்டிலேயை வைத்து கோழைத்தனமான முறையில் படுகொலை செய்தார்கள். இதன் பாதிப்பு யாருக்குத் தெரியுமா? ஈழத்தமிழனுக்குத்தான் எமக்காக குரல் கொடுத்து வந்த நாட்டின் குரல் வளையையே அறுத்துவிட்டார்கள் புலிகள்.

தனிநபரோ, விடுதலை இயக்கங்களோ வளர்ந்து வருவதை பிராபகரன் விரும்பவில்லை தானே இயக்கம்' தானே தலைவன் என்று திட்டமிட்டு நயவஞ்சகத்தனமான முறையில் செயல்பட்டுக் கொண்டிருந்த பிரபாகரனிற்கு ஏனைய இயக்கங்களின் வளர்ச்சி அச்சத்தை உண்டு பண்ணியது. குறிப்பாக T.E.L.O இயக்கத்தின் தாக்குதலினால் அவ்வியக்கத்திற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு வளரத்தொடங்கியது. வடமாகாணத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சேவைக்கு அமர்த்தப்பட்ட கொமான்டோ பொலிசார் மீது T.E.L.O இயக்கத்தினர் பட்டப்பகலில் வெற்றிகர தாக்குதலை நடாத்தினார்கள்.(இப்பொலிஸ்நிலையம் மீது பல முறை தாக்குதல் நடாத்திய L.T.T.Eயினர் தொடர்ந்து தோல்வியை தழுவியமை குறிப்பிடத்தக்கது.) இரயில் வண்டி மீதான தாக்குதல்(விடுதலை வரலாற்றில் முதன் முதலில், அதிகளவு இராணுவத்தினர் பொலிசாரும் கொல்லப்பட்டன.) இத் தாக்குதல்களால் TELOஇயக்கத்தின் மீது பிராபகரனின் பார்வை விழுந்தது. புலிகள் சில பொய் குற்றச்சாட்டுக்களை மக்கள் மத்தியில் பரப்பி வைத்து அவ் இயக்கத்தை அழித்தனர். ஆனால் திரு.நெடுமாறனோ ஏனைய இயக்கங்கள் இலங்கை இந்திய அரசுகளுடன் தொடர்பு வைத்தினால் புலிகளால் அழிக்கப்பட்டது என்கிறார். ஆனால் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தபோதுதான் தமிழ் தேசிய இராணுவம்(TNA) என்ற அமைப்பின்கீழ் TELO, EBRLF, ENDLF ஆகிய இயக்கங்கள் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கியதை திரு.நெடுமாறன் புரிந்துகொள்ளவேண்டும்.

www.tamilarangam.net

தமிழ்இன விடுதலைக்காகவே போராட புறப்பட்ட அனைத்து இயக்கம்களும் தங்கள் உயிர்களை விடுதலைக்காக அர்ப்பணித்தார்கள். புலிகளால் இவ் இயக்கம்கள் அழிக்கப்பட்டபின்னரே களத்தில் நின்று போராடமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. திரு.நெடுமாறன் கூறுகிறார் புலிகள்தான் களத்தில் நின்று போராடுகிறார்கள் என்று, உண்மைதான் தனித்து நின்று போராடுவதுதான் பிராபகரனின் விருப்பமுமாகும். ஏனை இயக்கங்கள் களத்தில் நின்று போராடும் உரிமையை பாலாத்காரமாக பறித்தெடுத்து ஒரே இயக்கம் ஒருவனே தலைவன் என்ற சர்வாதிகாரபோக்கில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்.

## யார் முதல் முதலில் இலங்கை அரசுடன் கைகோர்த்தவர்கள் ?

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலத்தில், அப்போது ஜனதிபதியாக இருந்த பிரேமதாசாவிடம் பணமும், ஆயுதமும் கொழும்பில் பாதுகாப்பான இருப்பிடமும் போன்றவற்றை புலிகள் பெற்றார்கள். அவ் ஆயதங்களினால் தமிழர் தொண்டர் படையையும் இந்திய இராணுவத்தையும் தாக்கினார்கள். குறிப்பாக திரு.நெடுமாறன் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். புலிகள் சிங்கள அரசிடம் வாங்கிய ஆயுதங்களினால் இந்திய இராணுவத்தை சேர்ந்த தமிழர்களை கொன்றுள்ளார்கள். இதைப்பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள், உங்கள் தேசப்பற்றை இனப்பற்றை எவ்வாறு பாராட்டுவது?

தமிழ் தலைவர்கள் சிங்கள அரசுகளுடன் ஒப்பந்தங்கள் முலம் பிரச்சனைக்குத் தீர்வு காண முற்பட்டன. பின்னர் அவை கிழித்தெறியப்பட்டன. ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது(காரணம் இந்தியா தலையிட்டபடியால்). பிரேமதாசாவும் இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார், அதற்குரிய சதித்திட்டங்களைத் தீட்டினர், புலிகளும் அவ் வேளை பலம் இழந்து இருந்தார்கள். அந்நேரத்தில் புலிகளுக்கு பிரேமதாசாவின் உறவு கிடைத்தது. புலிகளும் பிரேமதாசாவின் கைக்கூலிகளாக செயல்பட ஆரம்பித்தார்கள். இலங்கை முகாம்களில் புலிகளுக்கு அடைக்கலம் கொடுக்கபபட்டது.

1989ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் திகதி இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் சிங்கள இராணுவம் பக்க துணையாக இருக்க மன்னார் முள்ளிக்குளத்தில் அமைந்திருந்த P.L.O.T.E இயக்கத்தின் முகாமை தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவியுடன் மூன்று நாள் கடும் மோதலின் பின்பு தாக்கி அழித்தார்கள், தலை சிறந்த போராட்ட தளபதிகள் கொல்லப்பட்டனர். அக்காலகட்டத்தில் P.L.O.T.E இயக்கமும் இந்திய இராணுவத்துடன் முரண்பட்டு இருந்தது. ஓர் சகோதர அமைப்பை அழிப்பதற்கு சிங்கள அரசுடன் கூட்டுச்சேர்ந்தது புலிகளேயாகும், இவை திரு. நெடுமாறனுக்கு தெரியுமா?

1990ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி செட்டிகுளத்தில் அமைந்திருந்த P.L.O.T.E இயக்கத்தின் முகாம் சிங்கள இராணுவத்துடன் புலிகள் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் பல நூற்றுக்கணக்கான புலிகளை இழந்த நிலையில் தொடர்ந்து P.L.O.T.E இயக்கத்தின் தாக்குதலிற்கு ஈடுகொடுக்கமுடியாமல் சிங்கள இராணுவத்தின் ட்ரக் வண்டிகளில் இறந்த புலிகளினது சடலங்களை ஏற்றிக்கொண்டு தப்பியோடியது திரு. நெடுமாறனுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

1989ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு.அமிர்தலிங்கம், திரு.யோகேஸ்வரன் பேச்சுவார்த்தைக்கு என்று சென்ற புலிகளால் நயவஞ்சகமாக பிரேமதாசாவின் ஒத்துழைப்புடன் சுட்டுக்கொல்லப்பட்டனர். திரு.அமிர்தலிங்கம் ஈழத்தமிழர்கட்கு மட்டுமல்ல தமிழ் பேசும் மக்களிற்காகவே உலகின் மூலை முடக்கெல்லாம் தமிழ் மக்களின் பிரச்சனையை எடுத்துரைத்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர். அமரர் அமிர்தலிங்கம் தன்னை தெரிவு செய்த மக்களிற்காகவும் அவர்களின் விடிவிற்காகவும் தன்னையே அர்ப்பணித்தவர்.

திரு.நெடுமாறன் அவர்களே! தங்களை போல் சுயநலத்திற்காக அரசியல் நடாத்தாமல், தனது உயர்ந்த இலட்சியத்திற்காக தன்னையே அர்ப்பணித்தவர் அமரர் அமிர்தலிங்கம் அவர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் தமிழ்மக்கள் கூடும் இடங்களில் இந்திய இராணுவத்தை தாக்கிவிட்டு இலங்கை இராணுவ முகாம்களுக்குள் ஒளிந்து கொண்டார்கள். இந்திய இராணுவம் திருப்பித் தாக்கும்போது பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். இதன்மூலம் இந்திய இராணுவத்திற்கு கெட்டபெயரை ஏற்படுத்தினார்கள்.

புலிகள் தமது சொந்த நலனுக்காக தமது இயக்கம் மீண்டும் உயிர் பிழைக்கவேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார்கள் ஒழிய, இவ் ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்ய பிரேமதாசா தங்களை வைத்து நாடகம் ஆடுகிறார் என்பதில் துளியளவும் அக்கறை கொள்ளவில்லை.

பிரேமதாசா போட்ட திட்டம் வெற்றிபெற்றது. ஒப்பந்தம் காற்றில் பறக்கவிடப்பட்டது. இங்கும் ஈழத்தமிழனுக்கு ஏமாற்றம்தான். புலிகள் ஈழத்தமிழின வரலாற்றில் மாபெரும் துரோகத்தை இழைத்துவிட்டனர். இப்போது புரிகிறதா திரு. நெடுமாறன் அவர்களே! சிங்கள அரசுடன் சோரம்போய் தமிழினத்திற்கும் இந்தியாவிற்கும் கோரம் செய்த மாபாவிகள் யாரென்று. இப்போது கேட்கிறார்கள் புலிகள், இந்தியாவின் உதவி தேவையாம், இப்படியொரு விபச்சாரம் புரியும் விடுதலை இயக்கத்தை உலகில் எங்கும் காண முடியாது.

அராலியில் கொல்லப்பட்ட இராணுவத்தளபதி கொப்பேக்கடுவ கொலைக்கு புலிகள் உரிமை கோரினார்கள். ஆனால் தற்போது கொழும்பில் நடைபெற்றுவரும் விசாரணையில் கொப்பேக்கடுவ பிரேமதாசாவின் இராணுவச்சதியினால்தான் கொல்லப்பட்டார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொப்பேக்கடுவ கொலை செய்யப்பட்டபோது தென்இலங்கையில் பிரேமதாசாவிற்கு எதிராக மக்கள் எதிர்ப்பு வெடித்தது. உடனே பிரபாகரன் கொப்பேக்கடுவ கொலையின் அமுக்கவெடியை புதைத்த புலி வீரருக்கு தங்கப்பதக்கம் அணிவிப்பது போன்ற ஒரு படத்தை கொழும்புப் பத்திரிகைகளுக்கு அனுப்பி பிரேமதாசாவிற்கு வர இருந்த பெரிய ஆபத்தை தடுத்து நிறுத்தினார்.

அத்துலத்முதலியினால் பிரேமதாசாவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டது. இதனுடன் பிரேமதாசாவின் பதவி பறிபோகும் என்று பலர் எதிர்பார்த்தவேளையில் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்புக்கு அனுப்பிய பிரபாகரன் பாராளுமன்ற வாக்கெடுப்பில் பிரேமதாசாவிற்கு ஆதரவாக கையை உயர்த்தி பிரேமதாசாவை காப்பாற்றியவர்கள் யாழ்மாவட்ட அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களே. இதில் முக்கிய விடயம் என்னவென்றால் இவர்கள் ஈரோஸ் இயக்க சார்பில் புலிகளின் பின்னணியில்தான் யாழ்ப்பாணத்தில் இருந்தவர்கள். பிரபாகரன் உத்தரவுப்படி பாராளுமன்றம் செல்லாது இருந்தவர்கள், திடீரென பிரேமதாசாவின் தலைக்கு ஆபத்து வந்தவுடன் பாராளுமன்றம் சென்று ஆதரவாக கையை உயர்த்தி சிங்கள அரசை சிம்மாசனத்தில் வைத்திருக்க வழி செய்தார்கள்.

திரு. நெடுமாறன் அவர்களே! புரிகிறதா புலிகளின் இரட்டைவேட நாடகத்தை? சிங்கள அரசுக்கு எதிராக போராடுகிறோம் என்று மக்களையும் அப்பாவிப் புலிகள் இயக்கத்தில் இருக்கும் பால்மணம் மாறா, பச்சிளம் பாலகர்களையும் பலிகொடுத்துக்கொண்டு பிரேமதாசாவுடன் கள்ளஉறவு வைத்ததுமல்லாமல், அவருக்கு ஏற்பட்ட இரண்டு பெரிய ஆபத்துக்களிலும் இருந்து காப்பாற்றியிருக்கிறார் பிரபாகரன். தமிழினத்திற்காக போராடுகிறார் பிரபாகரன் என்று கூறிக் கொள்ளும் திரு. நெடுமாறன் அவர்களே பிரபாகரன் தமிழ் மக்களுக்கு காதில் பூ வைத்துவிட்டார் என்று கூறினால் பொருத்தமாக இருக்கும்.

ஒரு மக்களின் விடுதலைக்காக போதைவஸ்து வியாபாரம் செய்து பலஇன மக்களை அழிக்கும் போதைவஸ்து பணத்திற்கும் சொத்திற்கும் பினாமியாக இந்தியாவில் நீங்கள் செயல்படுவது வெட்கப்படுவதிற்கும் வேதனைக்கும் உரிய விடயமாகும்.

இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் திறமை படைத்த பிரதித் தலைவர் மாத்தையாவையும் நூற்றுக்கணக்கான புலி உறுப்பினர்களையும் றோவுடன் தொடர்பு(?) என்று கூறி மரணதண்டனை விதித்தார் பிரபாகரன். இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை காலம்தான் பதில் சொல்ல வேண்டும்

www.tamilarangam.net

முன்பு தமிழ் இயக்கங்களை, பின்பு தனது இயக்கத்திற்குள்ளேயே துரோகிகள் ஒழிப்பு என்று தொடர்ந்துகொண்டே போகிறது. மாத்தையாவின் கீழ் செயல்பட்ட குணம் என்பவர் தலைமையில் 60 புலி உறுப்பினர்கள் முல்லைத்தீவுக் காட்டுக்குள்ளேயே பதுங்கி இருந்து பின்னர் இராணுவத்துடன் சென்று சரணடைந்து தற்போது இராணுவத்துடன் இணைந்து குடாநாட்டில் செயல்படுகிறார்கள். அங்கு புலி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் இலகுவாக சிங்கள இராணுவத்திற்கு அடையாளம் காட்டுகிறார்கள். இதை வெளியில் சொல்ல முடியாத நிலையில் புலிகள் ஏனைய இயக்கங்கள்தான் குடாநாட்டில் செயல்படுகின்றன என்று தமது துரோகத்தனத்தை மறைக்கப் பார்க்கிறார்கள். திரு. நெடுமாறன் அவர்களே ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள் பிராபாகரனின் சர்வாதிகாரத்தினால் இன்று புலிக்குள்ளேயே பிரிவினை வளர்ந்திருக்கிறது.

சங்ககால போரியல் இலக்கியத்தையும் தமிழீழப் போரியல் இலக்கியத்தையும் ஒப்பிட்டுக்கூற முடியுமா? என்ற கேள்விக்கு நீங்கள் பதில் அளித்திருக்கிறீர்கள். சங்க காலத்தில் கூட பெண்கள், தங்கள் கணவன்மாரை, சகோதரரை, தகப்பன்மாரை போருக்கு அனுப்புவார்கள். அவர்கள் இறந்தால் தங்கள் வயதிற்கு வராத ஆண்பிள்ளைகளை அனுப்புவார்களாம். பெண்கள் போவதில்லையாம். அப்படியாயின் வயது குறைந்த பாலகர்களை அவர்கள் இறக்கும் நாளைக் குறித்து தற்கொலையாக அனுப்பும் பிரபாகரன் தனது மகனான பதினொரு வாது நிரம்பிய சாள்ஸ் அன்ரனியையும் திருச்சியிலிருக்கும் தகப்பனையும் சிங்கப்பூரில் இருக்கும் சகோதரனையும் ஏன் யுத்தத்திற்கு சயனைட் குப்பி கட்டி அனுப்ப முடியாது?

சங்க காலத்தில் பெண்கள் யுத்தத்திற்குப் போவதில்லையாம். ஆனால் தமிழீழத்தில் பெண்களை போருக்கு அனுப்பிய பெருமை பிரபாகரனைச் சேருமாம். ஆரம்ப காலத்தில் புலிப்படை இயக்கத்தின் தலைவரான உமாமகேஸ்வரனின் காதலியென்று அழைக்கப்பட்ட தமிழ் மகளிர் பேரவைத் தலைவி ஊர்மிளா பிரபாகரனினால் கொல்லப்பட்ட முதல் பெண் போராளியாவார். அதைவிட சொல்வதென்றால் பெண்கள் ஒடுக்குமுறைக்கு துணைபோகும் வகையில் 1984ம் ஆண்டு பகுதிகளில் திலீபன் அரசியல் பிரிவிற்குப் பொறுப்பாக இருக்கும்போது, வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் பெண்கள் சைக்கிள் ஓடக்கூடாது. ஜீன்ஸ் போடக்கூடாது. தலைமுடி கட்டையாக வெட்டக்கூடாது என்று புலிகள் பிரச்சாரம் செய்தார்கள். அந்த நேரத்தில் E.P.R.L.F அமைப்பு பெண்களைப் போராட்டத்தில் இணைத்துக்கொண்டது. ஆயுதப்பயிற்சியும் கொடுத்தது. இதனைப்பார்த்து புலிகள் கிண்டல் அடித்து பெண்கள் எப்படி ஆயுதங்கள் தூக்கலாம் என்று அவர்களின் வீரவேட்கையைக் கொச்சைப் படுத்தினார்கள். ஆனால் இன்றோ பெண்களைப் புலிகள் தற்கொலைப்படையாக அனுப்புகிறார்கள். காரநகர் கடற்படைத்தளத் தாக்குதலின்போது தமிழின விடுதலை வரலாற்றில் முகாமிற்குள் சென்று களத்தில் வீரமரணமடைந்த முதல் E.P.R.L.F பெண்போராளி E.P.D.P செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரியான தியாகி ஷேபா ஆகும்.

எனவே திரு. நெடுமாறன் அவர்களே! வரலாறுகளை திரிபுபடுத்தாதீர்கள். மிகைப்படுத்தாதீர்கள். உண்மைநிலை என்ன என்பதை அறியுங்கள். **தமிழ் நாட்டில் தமிழ்நாட்டு மக்களால் தூக்கி எறியப்பட்ட சந்தர்ப்பவாத அரசியல்வாதி நீங்கள்!** புலிகளை ஆதரிப்பதன் மூலம் பிரபல்யத்தைத் தேடும் நீங்கள் தங்கள் சுகபோக வாழ்க்கைக்காகவும், பணத்திற்காகவும் எமது போராட்ட வரலாற்றில் சேறு பூசவேண்டாமென அன்புடன் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எமது ஈழப் பிரச்சனையை நாமே தீர்த்துக் கொள்வோம். தாங்கள் தங்கள் நாட்டுப் பிரச்சனையைத் தீர்த்தால் போதும் என்று எமது தேசியத் தலைவர்(?) கூற்றுப்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

- உண்மையையும் நீதியையும் விரும்பும் பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்து கனடாவில்
வாழும் ஈழத்தமிழர்கள்
27-08-1996